## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், வானூர்.

திரு.பொன்வேந்தன், பி.டெக், எம்.எல்., மாவட்ட உரிமையியல் நீதிபதி அவர்களால் உறுதி மொழி சட்டம் பிரிவு 105-வது ஏற்பாட்டின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | - | திரு. செங்கல்வராயன் | அசல் வழக்கு எண். | 45/2018 |
| த/பெ. | - | மஞ்சினி | பி.சா. | 1 |
| கிராமம் | - | | | |
| வட்டம் | - | | | |
| தொழில் | - | | | |

29.10.2025.

**வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

1. எதன் அடிப்படையில் வழக்கு சொத்தை 8ம் பிரதிவாதிக்கு நான் விற்பனை செய்தேன் என்றால் எனக்கு பாகமாக கிடைத்த சொத்தை கிரையம் கொடுத்தேன். என்னுடைய பாக பிரிவினை பத்திரத்தை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். தற்போது என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.9 ஆவணத்தில் என்னுடைய தந்தை பெயர் இல்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தின் சர்வே எண் என்னவென்றால் புதிய எண்.132/2 பழைய எண்.109 ஆகும். நான் சொல்லும் சர்வே எண்ணில் வழக்கு சொத்து இல்லை என்றால் சரியல்ல.

2. வாதி மற்றும் வாதியின் தகப்பனரான அபிமன்னன் ஆகியோர் தான் வழக்கு சொத்தினை அனுபவித்து வந்தனர் என்றால் சரியல்ல, நாங்கள் தான் அனுபவித்து வந்தோம். நாங்கள் வழக்கு சொத்தினை அனுபவம் செய்து வந்ததற்கு எந்த ஆவணங்களும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நான் புதுச்சேரியில் தான் குடியிருந்து வருகிறேன் என்றும் வழக்கு சொத்து உள்ள கொஞ்சுமங்கலம் ஊரில் குடியிருக்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தை எந்த தேதியில் எந்த மாதத்தில் எந்த வருடத்தில் பாகம் பிரித்து கொண்டோம் என்பதை என்னுடைய எதிர்ப்பு வழக்குரை மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தை நாங்கள் பிரித்து கொள்ளவில்லை என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதி தான் குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய எதிர்ப்பு வழக்குரையை நான் படித்து பார்த்துள்ளேனா என்றால் படித்து பார்த்துள்ளேன். என்னுடைய எதிர்ப்பு வழக்குரை ஆங்கிலத்தில் தாக்கல் செய்துள்ளேனா அல்லது தமிழில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தமிழில் தாக்கல் செய்துள்ளேன். நான் சொல்வதுபோல் என்னுடைய எதிர்வழக்குரை தமிழில் தாக்கல் செய்யவில்லை என்றும் ஆங்கிலத்தில் தான் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும்

என்னுடைய எதிர்வழக்குரையை நான் படித்து பார்த்தது கிடையாது என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரக்கையை நான் சொன்ன பிறகு தயார் செய்தா அல்லது தயார் செய்த பின்பு நான் கையெழுத்து செய்தேனா என்றால் நான் சொன்ன பிறகு தயார் செய்யப்பட்டது. 9ம் பிரதிவாதியானவர் வாதிகளின் அண்ணன் மகன் என்றால் சரிதான். 8ம் பிரதிவாதிக்கு எழுதி கொடுத்த வா.சா.ஆ.9 கிரைய ஆவணத்தில் 9ம் பிரதிவாதி கையெழுத்து செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்தில் நாங்கள் அனுபவித்தில் இல்லை என்றும் வழக்கு சொத்தானது வாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்து என்றும் பொய்யான ஆவணத்தை வைத்து தவறாக வா.சா.ஆ.9 ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்தில் வாதிகள் தான் அனுபவத்தில் இருந்து வருகின்றனர் என்றும் வழக்கு சொத்திற்கும் எனக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும் அதன் காரணமாக வா.சா.ஆ.9 ஆவணம் இல்லா நிலையது என்றால் சரியல்ல.

8ம் பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் வேண்டுகோளின்படி குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in the presence of the withess read over to the witness, and admitted by him/her to be correct.

PONVENTHAN D
Digitally signed by PONVENTHAN D
Date: 2025.10.29 18:01:03 +0530

District Munsif
Vanur.